ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,077 — 1960 මාර්තු 11 වැනි සිකුරාදා — 11.3.1960

12,077 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 251 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### உலக அகதிகள் வருடத்தை நினைவுகூருவதற்கான விசேட முத்திரை வெளியீடு

உலக அகதிகள் வருடத்தை நினைவுகூருமுகமாக 1960 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 7 ஆம் திகதியன்று 4 சதம், 25 சதம் பெறுமதியான விசேட முத்திரைகள் வெளியிடப்படுமென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்த முத்திரைகள் 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை அல்லது கையிருப்பு முடியும் வரையுள்ள தினங்களில் எது முந்தியதோ, அந்தத் தினம் வரை விற்பனையில் இருக்கும். இம்முத்திரைகள் விற்பனையில் இருக்கும் காலத்தில் தற்போது இதே விலையிலுள்ள முத்திரைத் தொடர்களின் விற்பனை நிறுத்தப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஓவியர்கள் உலக அகதிகள் வருட முத்திரைகளுக்காக உருவாக்கிய சின்னத்தைத் தழுவி வரையப்பட்ட ஒரே சித்திரம் இரண்டு முத்திரைகளிலும் பொறிக்கப்பட்டிருக்கும்.

எம். எம். முஸ்தபா,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு, மார்ச்சு 7, 1960.

---

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

### சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி அல்பிறெட் எட்வின் கோக்கனி மொறக்கொட ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

அ. எ. கோக்கனி மொறக்கொட,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவு
செய்யும் அதிகாரி.

கொழும்பு,
1960 ம் ஆ பங்குனி மீ 7 ந் உ.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| C 6684—2.8.51 | அம்பலக்காரர் இபிறுகிக்காணி செய்யதுக்காது அமீது, 104, அறமயா வீதி, தெமட்டக்கொடை, கொழும்பு, 9 | நூர்சகான் பீபி (மனைவி), முகமது இக்பால் (மகன்), இரகமான் பீபீ (மகள்), சபருன்னிசா பீபீ (மகள்), உம்மு நோனு (மகள்), அக்பார் முகைதீன் (மகன்) |
| E 7382—3.8.51 | சீயன்ன முகமது, 104, அறமயா வீதி, தெமட்டக்கொடை, கொழும்பு 9 | சைத்தூன் பீபீ (மனைவி), அப்துல் றசாக் (மகன்) |
| I 4055—6.7.51 | வி. ஆ. சீயாம்பிள்ளை, பொன்னுச்சாமிப்பிள்ளை, 25, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி | தொட்டிச்சியம்மாள் (மனைவி), தனபாக்கியம் (மகள்), உலோகாம்பாள் (மகள்), சிவகாமி அல்லது இராச லெட்சுமி (மகள்), மகேசுவரி அம்மாள் அல்லது ஜெயலெட்சுமி (மகள்), ஜெயராமன் (மகன்), குமாரி தங்கமணி (மகள்), உலோகநாதன் இராசமாணிக்கம் (மகன்), தசரத சக்கிரவர்த்தி (மகன்), நவசோதி (மகள்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இன முறையும் |
|---|---|---|
| P 69—15.8.50 | .. இரெங்கசாமி அப்பாவு ஆறுமுகம், 2 ம் பிரிவு, டயக்கமாக் கிழக்குத் தொகுப்பு, அக்கிறப்பத்தனை | சிவகாமி (மனைவி), இராசசேகரன் (மகன்), இராகவன் (மகன்), இரெங்கராஜ் (மகன்), விமலா (மகள்), வேலப்பன் (மகன்) |
| T 411—8.7.51 | .. தமன்மால் ரொலரும், 46, பெருந் தெரு, யாழ்ப்பாணம் .. | ரதி பாய் (மனைவி), யானகி பாய் (மகள்) |

## விளம்பரம்

1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 1 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 26 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆல் பங்குனி (மார்ச்) மீ 1 ந் வ.

பேர்ணர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.